வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ஈழநாடு




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை


Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 19.01.2026 திங்கட்கிழமை இதழ் : 19 பக்கங்கள் : 08

# மாகாண சபைத் தேர்தல் குறித்து அனைத்து கட்சிகளுடனும் பேச்சு!



### அமைச்சர் சந்தன அபேரத்ன தகவல்

கொழும்பு, ஜன. 19

மாகாண சபைத் தேர்தலை எந்தத் தேர்தல் முறையில் நடத்துவது என்பது தொடர்பில் ஆராய்ந்து விதப்புரைகளை முன்வைப்பதற்கான குழு வெகுவிரைவில் நியமிக்கப்படும். பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளுடனும் மாகாண சபைத் தேர்தல் குறித்து பேச்சுவார்த்தையில் ஈடுபடுவோமென பொதுநிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்றங்கள் அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல்கள் குறித்து வினவிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது-

மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்தவேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாகவுள்ளோம். மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் காணப்படும் அடிப்படை சட்ட மற்றும் தொழில்நுட்பச் சிக்கல்களுக்குத் தீர்வு காண வேண்டும். காணப்படும் பிரச்னைகளுக்குத் தீர்வு காணாமல் தேர்தலை நடத்த முடியாது.

மாகாண சபைத் தேர்தலை பழையத் தேர்தல் முறையில் நடத்த வேண்டும் என்று ஒரு தரப்பினரும், புதியத் தேர்தல் முறையில் நடத்த வேண்டும் என்று பிறிதொரு தரப்பினரும்

07

## வடக்கின் முதன்மை பெருவிழாவாக பொங்கலை கொண்டாடவேண்டும்!

### மாகாண ஆளுநர் வேதநாயகன் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஜன. 19

எதிர்காலத்தில் தைப்பொங்கல் பண்டிகையை வடக்கு மாகாணத்தின் முதன்மைப் பெருவிழாவாக கொண்டாடுவதற்காக, வடக்கு மாகாணக் கல்வி மற்றும் பண்பாட்டலுவல்கள் அமைச்சு, மாகாண சுற்றுலாப் பணியகம் மற்றும் விவசாய அமைச்சு ஆகிய மூன்று துறைகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில், "வடக்கு

07

## வடக்கு - தெற்கு கலாசாரத் தொடர்புகளை "இனவாதம்" என முத்திரை குத்தவேண்டாம்



### நாமல் ராஜபக்ஷ கோரிக்கை

கொழும்பு, ஜன. 19

வடக்கு மற்றும் தெற்கு மக்களுக்கிடையிலான கலாசாரத் தொடர்புகளை "இனவாதம்" என முத்திரை குத்த வேண்டாம் என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தம்பத்தேகமயில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இதனை கூறினார்.

07

## தமிழ் மக்களுக்கு ஏற்ற தீர்வுத் திட்டத்தை முன்வைக்க கட்சிகள் ஒன்றுபடவேண்டும்



### சுரேஷ் பிறேமச்சந்திரன் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 19

புதிய அரசியல் யாப்பில் தமிழ் மக்களுககு ஒத்துவரக்கூடிய ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைக்க தமிழ்த் தேசிய கட்சிகள் ஒன்றுபட்டு முன்வரவேண்டும் என ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளரும், ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று

07

## வடக்கு-கிழக்கில் மீண்டும் மழை!

யாழ்ப்பாணம், ஜன. 19

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் மிதமானது முதல் சற்று கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது என யாழ். பல்கலைக்கழகத்தின் புவியியற் துறை தலைவர் பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர் நேற்று வெளியிட்டுள்ள பதிவில் மேலும் குறிப்பிடுகையில்-

எதிர்வரும் 22 ஆம் திகதி இலங்கையின் கிழக்கு மற்றும் தென்கிழக்கு வளிமண்டலத்தில் உறுதியற்ற தன்மை ஒன்று உருவாகும் வாய்ப்புள்ளது.

07

## கல்வி மறுசீரமைப்பு கைவிடப்படமாட்டாது

### அரச தரப்பு திட்டவட்டம்

கொழும்பு, ஜன. 19

"கல்வி மறுசீரமைப்பு கைவிடப்படமாட்டாது. வங்குரோத்து அரசியலின் வெளிப்பாடாகவே கல்வியை க்கூட எதிரணி அரசியல் ஆயுதமாக்கியுள்ளது." என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

" கல்வி மறுசீரமைப்பின் முக்கியத்துவம் பல வருடங்களாக வலியுறுத்தப்பட்டுவருகின்றன.

07

## 250 ஆரோக்கிய மையங்களை நாடு முழுவதும் நிறுவ திட்டம்

கொழும்பு, ஜன. 19

இலங்கையின் ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு சேவையை சர்வதேச தரத்திற்கு உயர்த்துவதற்கும், தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்துவதற்குமாக இந்த ஆண்டில் 250 புதிய "ஆரோக்கிய நல்வாழ்வு மையங்கள் நிறுவப்படவுள்ளன.

கண்டி தலதா மாளிகையில் நடைபெற்ற விசேட மருத்துவ முகாமில் கலந்து கொண்ட சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்தார்.

07

## யாழ். நகரில் விபத்து; ஒருவர் படுகாயம்!



யாழ்ப்பாணம், ஜன. 19

யாழ்ப்பாணம் - கச்சேரி நல்லூர் வீதியில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில்

07

## வடக்கு ரயில் பாதை சீரமைப்பு இன்று ஆரம்பம்

கொழும்பு, ஜன. 19

டித்வா சூறாவளி காரணமாக பாதிக்கப்பட்ட வடக்கு ரயில் பாதையின் புனரமைப்புப் பணிகள் இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக ரயில்வே பொது முகாமையாளர் ரவீந்திர

07

## வல்லை பகுதியில் கார் நேற்று விபத்து; ஒரே குடும்பத்தை சேர்ந்த 3 பேர் காயம்!



யாழ்ப்பாணம், ஜன. 19

யாழ்ப்பாணத்தில் கார் ஒன்று வேக கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில் , ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திருநெல்வேலிப் பகுதியைச் சேர்ந்த கணவன்

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இது வெறும் தகவல்களின் தொகுப்பல்ல...**
**ஒரு தனிமனிதன் செதுக்கிய சரித்திரம்!**

பதினெட்டு வயதில் நிருபராய் கால்பதித்து - இன்று
ஊடகச் சாம்ராச்சியத்தின் சரிபாதி நின்றிருக்கும்
உழைப்பின் உன்னதப் பெருமிதம்!

பிரான்சு மண்ணில் தமிழ் மொழியை விதைத்து,
ஈழத்து ஊடகக் கலையில் புது விடியல் தந்து -
இலங்கையில் இருபத்தி நான்கு மணிநேரமும்
செய்திச் சுடரேற்றிய ஒரே ஒளிவிளக்கு... "டான்"!

இவை வெறும் திட்டமிடல் அல்ல - உங்கள்
தீர்க்கதரிசனத்தின் மகுடம்!
அறிவின் களஞ்சியமாய்... நடமாடும் பல்கலைக்கழகமாய்...
நவீன காலத்தின் "மானுட ஏ.ஐ" நீங்கள்!

அகன்ற திரையில் உலகைக் காட்டும் - உங்கள்
ஆளுமையின் வீச்சு வியப்பின் எல்லை!
தவறு கண்டால் கனலாய் சீறும் கோபம் - அடுத்த
நொடியே அருவியாய் மறைந்து போகும் பாசம்!
குணத்தால் உயர்ந்து நிற்கும் இமயம் நீங்கள்!

தளராத உழைப்போடு இன்று வெள்ளி விழா காணும் -
உங்கள் வெற்றியின் பின்னணியில்,
உயர்ந்து நிற்கிறது உங்கள் குடும்பத்தின் தியாகம்!

கொள்கைகள் வேறாயினும், நட்பை என்றும்
சிம்மாசனத்தில் வைத்துப் போற்றும் மாண்பாளர்!
வரலாற்றுச் சாதனை படைத்த எங்கள் தலைமகனே...
உழைப்பின் சிகரமே... குகநாதன் எனும் ஆளுமையே...
தலைவணங்கிச் சொல்கிறோம் - பல்லாண்டு வாழ்க!

டான் குடும்பம்.

# பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு மாற்றான சட்டம் தொடர்பில் விசேட கலந்துரையாடல்

மன்னார், ஜன. 19

நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு மாற்றீடாக கொண்டு வரப்படவுள்ள பயங்கரவாதத்திலிருந்து அரசை பாதுகாக்கும் சட்டம் தொடர்பான ஆபத்துக்கள் தொடர்பில் தெளிவு படுத்தும் கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் மன்னாரில் இடம் பெற்றது.

குறித்த கலந்துரையாடல் வடக்கு கிழக்கு சிவில் ஒருங்கிணைப்புக் குழு ஏற்பாட்டில் மாவட்ட இணைப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது, தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு மாற்றீடாக முன்மொழியப்பட்ட பயங்கரவாதத்திலிருந்து அரசை பாதுகாக்கும் சட்டம் புதிய சட்டமாக வரவுள்ளது.

இது நாட்டின் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டது.

ஆனால் பரந்த வரையறைகள் மற்றும் கடுமையான பிரிவுகள் காரணமாக இது பொது மக்களின் போராட்டங்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் புலம்பெயர் சமூகத்தினரை குறிவைக்க கூடும் என கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

அத்துடன், இலங்கை குடிமக்கள் வெளிநாடுகளில் இருந்தாலும் இந்த சட்டத்தின் கீழ் வருவார்கள். சமூக ஊடகங்களில் கருத்து தெரிவிப்பவர்களும் பாதிக்கப்படலாம் எனவும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

கலந்துரையாடலில் வளவாளராக சட்டத்தரணி எஸ்.டினேசன் கலந்து கொண்டதுடன் பங்கேற்பாளர்களாக உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள், உறுப்பினர்கள், மகளிர் அமைப்பின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள், கடற் தொழில் சங்கங்களின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் சிவில் அமைப்பின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

## உப்பு கொள்கலன்கள் துறைமுகங்களில் தேக்கம்!

கொழும்பு, ஜன. 19

வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட கால எல்லையை மீறி இறக்குமதி செய்யப்பட்டதன் காரணமாக, 1,500 இற்கும் மேற்பட்ட உப்பு கொள்கலன்கள் தற்போது இலங்கை துறைமுகங்களில் தேக்கமடைந்துள்ளன.

சுங்கத் திணைக்களமும் வர்த்தக அமைச்சும், இந்த உப்பை சட்டப்படி விடுவிக்க முடியாது என்றும், அவை மீள ஏற்றுமதி செய்யப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளன.

சுங்கத் திணைக்கள பேச்சாளர் சந்தன புஞ்சிஹேவா கூறுகையில்-

குறித்த உப்பு பறிமுதல் செய்யப்படவில்லை. வர்த்தமானி அறிவிப்பை மீறியதால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. கூடுதல் செலவுகள் ஏற்படும் என்பதால், இறக்குமதியாளர் கள் உப்பை மீள ஏற்றுமதி செய்யாமல் விட்டுள்ளனர். இதனால் உப்பு கைவிடப்பட்ட சரக்குகளாக மாறியுள்ளது. இறக்குமதியாளர்கள் சரக்குகளை பெற்றுக் கொள்ளாத நிலையில், சுங்கவரி அல்லது துறைமுகக் கட்டணங்களை வசூலிக்க சட்ட ரீதியான அதிகாரம் இல்லை.

உப்பு இறக்குமதி தொடர்பான வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டது இறக்குமதி கட்டுப்பாட்டாளர் என்பதால், அடுத்த கட்ட நடவடிக்கைகள் அவரது பொறுப்பில் உள்ளது-என்றார். (அ)

# மின்சாரசபையின் விருப்ப ஓய்வு திட்டத்தில் தாமதம்!

### ஜனாதிபதியின் தலையீட்டை கோருகின்றனர் ஊழியர்கள்

கொழும்பு, ஜன. 19

மின்சார சபையின் விருப்ப ஓய்வு திட்டத்திற்கு விண்ணப்பித்துள்ள ஊழியர்கள், அந்தத் திட்டம் தாமதமாகி வருவதால் ஜனாதிபதியின் தலையீட்டை கோரியுள்ளனர்.

இது தொடர்பாக ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், மின்சார சபை மறுசீரமைப்புப் பணிகள் தாமதமடைந்துள்ளதால், சுமார் 2,200 ஊழியர்கள் தெளிவற்ற நிலையில் உள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதிகாரபூர்வமாக அறிவிக்க வேண்டிய நியமிக்கப்பட்ட திகதி இதுவரை வர்த்தமானியில் வெளியிடப்படாத காரணத்தால், தாங்கள் மின்சார சபையிலிருந்து விலக முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

விருப்ப ஓய்வு திட்டத்திற்கான அனைத்து நடைமுறைகளும் முடிவடைந்துள்ள நிலையில், எரிசக்தி அமைச்சரின் வர்த்தமானி அறிவிப்பு மட்டுமே நிலுவையில் இருப்பதாக ஊழியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

எனவே, 2026 ஆம் ஆண்டு பெப்ரவரி 1ஆம் திகதியை அதிகாரபூர்வ நியமிக்கப்பட்ட திகதியாக அறிவிக்குமாறு அவர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# முறையான திட்டங்கள் இல்லாத கல்விச் சீர்திருத்தத்தால் பாதிப்பு

### தரப்படுத்தப்பட்ட அதிபர் சங்கம்

கொழும்பு, ஜன. 19

முறையான முன்னோடித் திட்டங்கள் இல்லாத கல்வி சீர்திருத்தங்களை இப்போது திணிப்பது பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பாதிக்கும் என தரப்படுத்தப்பட்ட அதிபர் சங்கத்தின் பொதுச்செயலாளர் நிமால் முதுன்கொட்டுவ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தரம் 6 சீர்திருத்தங்களை 2027 வரை ஒத்திவைக்க அமைச்சரவை கூட்டாக முடிவெடுத்தது. ஆனால், அமைச்சர்களான நளிந்த ஜயதிஸ்ஸ மற்றும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஆகியோரே இப்போது ஜனவரி 29 முதல் இதை நடைமுறைப்படுத்தவேண்டும் என முரண்பாடாகப் பேசுகிறார்கள்.

ஜனாதிபதியின் விஞ்ஞான பூர்வமான முடிவைப் புறந்தள்ளிவிட்டு, பிரதமர் ஹரிணி அமரசூரிய ஜே.வி.பியை வேறு திசையில் இழுக்கப்பார்க்கிறார். இது கூட்டுப் பொறுப்பை மீறும் செயலாகும்.

பெற்றோர்கள் பொய்களால் ஏமாற்றப்படுகிறார்கள். பாடசாலைப் பையின் பாரத்தைக் குறைக்காத, முறையான முன்னோடித் திட்டங்கள் இல்லாத இந்த சீர்திருத்தங்களை இப்போது திணிப்பது எமது பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பாதிக்கும்.ஆகவேதான் 2027-ஆம் ஆண்டே இதற்குப் பொருத்தமானது என கூறுகின்றோம்-என்றார். (அ)

# வடமராட்சி கிழக்கு கரையோர பகுதி பிரதேச சபையால் தூய்மைப்படுத்தல்

யாழ்ப்பாணம், ஜன. 19

யாழ் வடமராட்சி கிழக்கு கரையோர கரையோர பகுதிகளில் காணப்படும் குப்பைகள் பருத்தித்துறை பிரதேச சபையால் நேற்று தூய்மைப்படுத்தப்பட்டன.

பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் உதயகுமார் யுகதீஷ் தலைமையில் நேற்று காலை 7:30 மணியிலிருந்து தூய்மைப் படுத்தும் செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மாமுனை தொடக்கம் கட்டைக்காடு கரையோரப் பகுதிகளில் காணப்படும் குப்பை களே இவ்வாறு தூய்மைப்படுத்தப்பட்டன.



கடந்த காலத்தில் டித்வா புயலினால் கரையோரப் பகுதிகளில் குப்பைகள் அதிகளவாக தேங்கி காணப்பட்டன.

வீதி ஓரங்களில் குப்பைகள் காணப்படுவதனால் நோய் பரவும் அபாயம் காணப்படுவதாகவும், உடனடியாக அகற்றுமாறும் கடந்த காலத்தில் மக்கள் பல கோரிக்கைகளை முன்வைத்து வந்தனர்.

மக்களின் கோரிக்கைக்கு அமைவாக பருத்தித்துறை பிரதேச சபையால் வடமராட்சி கிழக்கு கரையோர பகுதிகளில் காணப்பட்ட குப்பைகள் அகற்றப்பட்டன. (அ)

# வவுனியா பதிப்பகத்தார் சங்கத்துடன் இலங்கை பதிப்பக சங்கம் கைகோப்பு

வவுனியா, ஜன. 19

இலங்கை பதிப்பக சங்கம் வவுனியா பதிப்பகத்தார் கூட்டுறவு சங்கத்துடன் இணைந்து புதிய உத்திகளுடன் கூடிய கட்டமைப்பு ஒன்றினை உருவாக்கும் நோக்குடனான நிகழ்வு வவுனியாவில் இடம்பெற்றது.

வவுனியா கூட்டுறவு சம்மேளன மண்டபத்தில் இடம் பெற்ற நிகழ்வில் இலங்கை பதிப்பக சங்கத்தின் செயற்பாடுகள், பிராந்திய ரீதியில் உள்ள பதிப்பகத்தாருக்கான புதிய தொழில்நுட்ப உத்திகள், உலக சந்தையில் பதிப்பகத்திற்குள்ள கேள்வி அதனை விரிவுபடுத்துவதற்கான வழிவகைகள் தொடர்பில் தெளிவு படுத்தப்பட்டதுடன் வவுனியா மாவட்ட பதிப்பகத்தார் எதிர்கொள்ளும் சவால்கள் அதற்கு காணக்கூடியதாக தீர்வுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இந்த நிகழ்வில் இலங்கை பதிப்பக சங்கத்தின் தலைவர் ஜனா ரத்னகுமார, உபதலைவர் நிசாந்த பெரேரா, வீரகேசரியின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் சங்கத்தின் உபதலைவருமான எம். செந்தில்நாதன் சங்கத்தின் உறுப்பினர் தினேஷ் மேர்வின் உட்பட பலர் கலந்துகொண்டனர். (அ)

# குப்பைக்கு வைத்த தீயால் வீட்டுக்கு பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 19

யாழ்ப்பாணத்தில் குப்பைக்கு வைத்த தீ வீட்டில் பற்றிக் கொண்டதால் அந்த வீடு பகுதியளவில் பாதிக்கப்பட்டது.

அரியாலை பகுதியில் உள்ள வீடொன்றில் வசிப்பவர்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை வீட்டு வளவுக்குள் இருந்த குப்பைக்கு தீ வைத்து விட்டு, வெளியே சென்றுள்ளனர்.

குப்பையில் பற்றிய தீ அருகில் இருந்த வீட்டின் கூரையில் பற்றி வீடு தீப்பற்றியுள்ளது. இதனை அவதானித்த அயலவர்கள் விரைந்து செயல்பட்டு தீயை அணைத்துள்ளனர்.

குறித்த சம்பவத்தில் வீட்டின் ஒரு பகுதி தீயில் எரிந்துள்ளது. (எ-03)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
19.01.2026 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், தை 04

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## அரசியலுடன் பிணைந்திருக்கும் சுற்றுச் சூழல் கரிசனை

மன்னாரில் காற்றாலை திட்டத்திற்கான கட்டுமானத்தை ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க ஆரம்பித்து வைத்திருக்கின்றார். தமிழர் திருநாளான தைப்பொங்கல் தினத்தன்று அதனை ஆரம்பித்திருக்கின்றார். சற்று பின்நோக்கி பார்த்தால் மன்னார் காற்றாலைத் திட்டத்தை முன்வைத்து எவ்வாறான ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் இடம்பெற்றது? இந்தியாவின் உலக முதலீட்டாளரான அதானியின் பசுமை சக்தித் திட்டத்திற்கான நிறுவனம் மன்னாரிலும் பூநகரியிலும் 443 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீட்டை மேற்கொள்ள திட்டமிட்டிருந்தது. இதற்கான அனுமதியை அப்போதைய ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் வழங்கியிருந்தது. இதற்கான ஆரம்பக்கட்ட பணிகள் அனைத்தும் முடிந்திருந்தன. ஆரம்பத் திட்டமாக 250 மெகாவட்ஸ் காற்றாலைத் திட்டத்தை மன்னாரில் ஆரம்பிப்பதற்கான பணிகளை முன்னெடுத்தபோது எதிர்ப்புக்கள் வெளிக்கிளம்பியது.

திட்டத்திற்கான சுற்றுச் சூழல் ஆய்வறிக்கைகள் அனைத்தும் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட பின்னர்தான் திட்டத்திற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் அவைகள் தவறான அறிக்கைகள் - இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டால், வெளிநாடுகளில் இருந்து வரும் பறவைகள் பெருமளவில் இறந்துவிடும் - எனவே இது அடிப்படையில் சுற்றுச் சூழலுக்கு எதிரான திட்டமாகும் என்னும் அடிப்படையில் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன.

கொழும்பை தளமாகக் கொண்டு இயங்கிவரும் சுற்றுச் சூழல் அமைப்புக்கள் சிலவும் மன்னார் ஆயரும் இணைந்து திட்டத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். இவ்வாறானதொரு பின்னணியில் தேர்தலில் வெற்றி பெற்றால் அந்தத் திட்டத்தை தாங்கள் நிறுத்துவோம் என்று ஜனாதிபதி வேட்பாளரான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்திருந்தார். இவ்வாறான சர்ச்சைகளுக்கு மத்தியில் அதானி நிறுவனம் திட்டத்திலிருந்து வெளியேறுவதாக அறிவித்திருந்தது. ஏனெனில் இதனால் அதானிக்கோ அல்லது இந்தியாவிற்கோ எந்தவொரு நட்டமும் இல்லை. ஒரு பாரிய முதலீட்டுத் திட்டத்தை இழந்து போனதால் இலங்கைக்கே நட்டம் - அதே வேளை அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் வடக்கு மாகாண அபிவிருத்திக்கான கதவும் திறந்திருக்கலாம் - அந்த வாய்ப்பும் தடுக்கப்பட்டது.

காற்றாலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டால் பறவைகள் இறந்துவிடும் என்று வாதிட்டவர்கள் இப்போது அமைதியாக இருப்பதன் பின்னணி என்ன? இப்போதுள்ள காற்றாலைகளில் பறவைகள் மோதுண்டு இறக்காதா? உண்மையில், அமெரிக்க ஆய்வுகளின்படி, காற்றாலைத் தகடுகளில் மோதுண்டு இறக்கும் பறவைகள் அண்ணளவாக 140000 - 670000 அளவுதான் ஆனால் பறவைகள் பறக்கும் வழியில் கட்டடங்களில் மோதி அல்லது அவ்வாறு விழும் பறவைகள் வீட்டுப் பூனைகளுக்கு இரையாகுவதன் மூலம் வருடம் தோறும் 988 மில்லியன் தொடக்கம் 4 பில்லியனுக்கும் அதிகமான பறவைகள் இறக்கின்றன. அதே போல் மின்சார வயர்களில் மோதி வருடாந்தம் இறக்கும் பறவைகள் 12 மில்லியன் தொடக்கம் 64 மில்லியன் ஆகும். ஆனால் இது பற்றி இலங்கையின் சுற்றுச் சூழல் விற்பன்னர்கள் எவரும் பேசவில்லை. இந்தியாவின் அதானியின் திட்டத்தை எதிர்க்க வேண்டும் என்னும் ஒரேயொரு நோக்கம் மட்டும்தான் இருந்ததா என்னும் கேள்வி இவ்விடத்தில் தவிர்க்க முடியாமல் எழுகின்றது.

சுற்றுச் சூழல் கரிசனைகள் இருக்க வேண்டியது அவசியம் . ஆனால் அவை அரசியல் கலப்பற்றதாக இருக்க வேண்டும். உண்மையிலேயே சுற்றுச் சூழல் கரிசனை இருந்திருந்தால், காற்றாலை தகடுகளில் பறவைகள் மோதும் விகிதத்தை தடுக்கும் உக்திகள் பல உண்டு. நோர்வேயில் இது தொடர்பில் பல ஆய்வுகள் உண்டு. வெற்றிகரமான உதாரணங்கள் உண்டு. ஆனால் அவைகள் தொடர்பில் இலங்கையில் எவருமே விவாதிக்கவில்லை - மாறாக திட்டத்தை நிறுத்தவேண்டும் என்பதே ஒரேயொரு நோக்கமாக இருந்தது. இதன் பின்னணி என்ன? மேற்கு மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டிருக்கும் அபிவிருத்தி சாம்ராச்சியமானது, வடக்கு மாகாணத்தை நோக்கி வந்துவிடக் கூடாது என்பதா? வடக்கு கிழக்கில் - இதனை விளங்கிக் கொள்ளும் ஆற்றலோடு எந்தவொரு அரசியல் கட்சியாவது அல்லது சிவில் சமூகக் குழுக்கள் - புத்திஜீவிகள் இருக்கின்றனரா?

## வெளிநாட்டு தயாரிப்பு துப்பாக்கி, 120 தோட்டாக்களுடன் இருவர் கைது

கொழும்பு, ஜன. 19

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட ரிவோல்வர் ரகத் துப்பாக்கியுடன் இரண்டு சந்தேகநபர்கள் தெற்கு கொழும்பு குற்றப் புலனாய்வுப் பணியகத்தால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மருதானை, பட்டியாவத்தை பகுதியில் குறித்த பணியகத்துக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இந்தச் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, 2 கிராம் 500 மில்லி கிராம் “ஐஸ்” போதைப்பொருள் மற்றும் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட ரிவோல்வர் ரகத் துப்பாக்கியுடன் ஒரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

இவர் கொழும்பு 10 பகுதியைச் சேர்ந்த 30 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் மற்றுமொரு நபரிடம் தோட்டாக்களை வழங்கியமை விசாரணைகளில் தெரியவந்ததையடுத்து, மற்றுமொரு சந்தேக நபரும் அதே பணியகத்தினால் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 9எம் எம் ரகத்தைச் சேர்ந்த 75 தோட்டாக்களும், ரி- 56 ரகத்தைச் சேர்ந்த 45 தோட்டாக்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

32 வயதுடைய இந்தச் சந்தேகநபரும் கொழும்பு 10 பகுதியைச் சேர்ந்தவராவார். கைது செய்யப்பட்டவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.(எ)

## 50 கிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைது: கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு நடவடிக்கை

கொழும்பு, ஜன. 19

கொழும்பு - கிராண்ட்பாஸ், பெர்குசன் வீதி பகுதியில் 50 கிராம் 210 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை கொழும்பு மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் கொழும்பு 14 ஐச் சேர்ந்த 39 வயதுடையவர் என தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு, இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

(எ)

## லொறி - சைக்கிள் மோதி விபத்து: முதியவர் பரிதாபமாக உயிரிழப்பு

கொழும்பு, ஜன. 19

பன்னல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சந்தலங்காவ பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை இந்த சம்பவம் இடம்பெற்றது.

தங்கொட்டுவவிலிருந்து வெட்டகெய்யாவ நோக்கிச் சென்ற லொறி, முன்னால் சென்ற சைக்கிள் மீது மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது. இதன்போது, விபத்தில் சிக்கிய முதியவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

விபத்தில் உயிரிழந்தவர் கோனவில பகுதியைச் சேர்ந்த 75 வயதுடையவர் என தெரியவந்துள்ளது. விபத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், பன்னல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## பல பகுதிகளில் அதிகாலை பனி மூட்டம்: கடல் பகுதிகளில் ஓரளவு கொந்தளிப்பு

கொழும்பு, ஜன. 19

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் சீரான வானிலை நிலவக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.


நுவரெலியா மாவட்டத்தின் சில இடங்களில் அதிகாலை வேளையில் மூடுபனி காணப்படும். மத்திய, சப்ரகமுவ, மேல், வடமேல், வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களின் சில இடங்களிலும் அத்துடன் அம்பாறை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அதிகாலை வேளையில் பனி மூட்டம் காணப்படும்.

நாட்டை சூழவுள்ள கடல் பிராந்தியங்களில் சீரான வானிலை காணப்படும். கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 25 - 35 கிலோ மீற்றர் வேகத்தில் வடகிழக்குத் திசையில் இருந்து காற்று வீசும்.

கொழும்பு தொடக்கம் புத்தளம் ஊடாக மன்னார் வரையான அத்துடன் மாத்தறை தொடக்கம் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 40 - 45 கிலோ மீற்றரிலும் கூடிய வேகத்தில் அடிக்கடி அதிகரித்து காற்று வீசக் கூடும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இக் கடல் பிராந்தியங்கள் ஓரளவு கொந்தளிப்பாக காணப்படும்.

நாட்டை சூழ உள்ள ஏனைய கடல் பிராந்தியங்கள் இடைக்கிடையே ஓரளவு கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். தள்ளிப்போன விஷயங்கள் உடனே முடியும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும்.

**இடபம்**
சந்திராஷ்டமம் நீடிப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். குடும்பத்தில் உள்ளவர்கள் யாரும் தன்னைப் புரிந்துக்கொள்ளவில்லை என ஆதங்கப்படுவீர்கள்.

**மிதுனம்**
கடினமான காரியத்தையும் எளிதாக முடிப்பீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். தாய் வழியில் மதிப்புக் கூடும். வியாபாரத்தில் புது வேலையாட்கள் அமைவார்கள். சாதிக்கும் நாள்.

**கடகம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. பழைய உறவினர் நண்பர்களை சந்தித்து மகிழ்வீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். பிரபலங்களால் ஆதாயமடைவீர்கள்.

**சிம்மம்**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் அன்புத்தொல்லை குறையும். வேற்றுமதத்தவர் உதவுவார்.

**கன்னி**
தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். அரசு அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். புது வேலை அமையும். வெல்லும் நாள்.

**துலாம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உங்களுக்கு ஒத்தாசையாக இருப்பார்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும்.

**விருச்சிகம்**
இதுவரை இருந்த அலைச்சல், டென்ஷன் கோபம் யாவும் நீங்கி ஒரு தெளிவு பிறக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். தோற்றப் பொலிவு கூடும்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில வேலைகளை நீங்களே முன்னின்று முடிப்பது நல்லது. அடுத்தவர்கள் மனசு காயப்படும் படி பேசாதீர்கள். சூழ்நிலைகளை சமாளிக்க வேண்டிய நாள்.

**மகரம்**
திட்டமிட்ட காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். பிள்ளைகள் பிடிவாதமாக இருப்பார்கள். யாரிடமும் உணர்ச்சிவசப்பட்டு பேசாதீர்கள். வழக்கில் அலட்சியம் வேண்டாம்.

**கும்பம்**
எதிலும் வெற்றி பெறுவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். பழைய கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். பிரியமானவர்களுக்காக சிலவற்றை விட்டுக் கொடுப்பீர்கள்.

**மீனம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். பிள்ளைகளின் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். சிலர் உங்களை நம்பி பெரிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள்.

# ஹெரோயின், ஐஸ் போதையுடன் வேலணையில் இருவர் சிக்கினர்

*யாழ்ப்பாணம், ஜன. 19*

விற்பனைக்கு தயாரான நிலையில் வைத்திருந்த 2,350 மில்லி கிராம் ஹெரோயின் மற்றும் 12 கிராம் ஐஸ் போதைப்பொருட்களுடன் வேலணையில் இருவர் ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றதாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

இது குறித்து மேலும் தெரியவருகையில்,

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவின் ஆளுகைக்குள் போதைப்பொருள் பாவனை மற்றும் விற்பனையை இல்லாதொழிக்கும் விசேட நடவடிக்கையை ஊர்காவற்றுறை பொலிஸார் முன்னெடுத்துவரும் நிலையில் தொடர்ச்சியாக பலர் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுள்ளனர்.

ஆனாலும், சிலர் இரகசியமான முறையில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வருவது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், பொலிஸ் பரிசோதகர் வினோத்குமார் தலைமையிலான அணியினர் முன்னெடுத்த விசேட நடவடிக்கையின் போதே இந்த இருவரும் கைது செய்யப்பட்டனர்.

விற்பனைக்கு தயாராக குறித்த போதைப் பொருட்களை வைத்திருந்தபோதே வேலணை திருவள்ளுவர் வீதியைச் சேர்ந்த இருவர் கைதாகியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில் தமக்கு நாச்சிக்குடாவில் இருந்தே போதைப் பொருள் கிடைப் பதாக குறித்த இருவரும் பொலிஸாரின் விசாரணையின் போது தெரிவித்திருந்த நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். குறித்த இருவரும் விசார ணைகளின் பின்னர் ஊர்காவற்றுறை நீதிவான் முன்னிலையில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-03)

# பொற்பதி மக்கள் நலன்புரி சங்கத்தின் 7ஆம் ஆண்டு நிறைவு விழா நடைபெற்றது

*யாழ்ப்பாணம், ஜன. 19*



பொற்பதி மக்கள் நலன்புரி சங்கத்தின் 7ஆம் ஆண்டு நிறைவு விழா பொற்பதி- குடத்தனையில் உள்ள அதன் தலைமை காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில், முதல் நிகழ்வாக விருந்தினர்கள் மலர் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டனர். தொடர்ந்து மங்கள சுடர்களை ஜனநாயக போராளிகள் கட்சி தலைவர் சி. வேந்தன், முன்னாள் பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் ஆ. சுரேஷ்குமார், மக்கள் நலன்புரி சங்க இயக்குநர் கே. சந்துரு, பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர்களான ஆகஸ்ரின், திருமதி சுரேஷ்குமார், பருத்தித்துறை நகர சபை உறுப்பினர் ஜெயகாந்தன் ஜெயகோபி, உட்பட பலரும் ஏற்றினர்.

அதனை தொடர்ந்து தலைமையுரையை பொற்பதி மக்கள் நலன்புரி சங்கத்தின் தலைவர் சிவலிங்கம் சிறிகலாதன் நிகழ்த்தினார்.

விஜய் ரிவி யூனியர் பாடல் போட்டிக்கு தெரிவாகிய கற்கோவளம் சிறுமி அனுஷ்காவின் பாடல்கள் நடைபெற்றன.

அதனைத் தொடர்ந்து கல்வி சாதனையாளர்களான ம. கர்சன், அ. ஜனார்த்தன், ம. சாருஷா ஆகியோர் க.பொ.த. உயர் தரத்தில் சித்தியடைந்தமைக்காக கௌரவிக்கப்பட்டதுடன் தரம் 5 புலமை பரிசில் பரீட்சையில் 142 புள்ளிகளை பெற்ற அ. அதிசயனும் கௌரவிக்கப்பட்டார். (எ-03)

# தையிட்டி திஸ்ஸ விகாரை அமைந்துள்ள காணிகளை விரைவாக விடுவியுங்கள்

## ஜனாதிபதியிடம் விகாராதிபதி கோரிக்கை

*யாழ்ப்பாணம், ஜன. 19*

தையிட்டி திஸ்ஸ விகாரை அமைந்துள்ள பொதுமக்களின் காணிகளை விரைவாக விடுவியுங்கள் என்று ஜனாதிபதியிடம் தான் வலியுறுத்தியதாக யாழ்ப்பாணம் நாகவிகாரையின் விகாராதிபதி சிறிவிமல நாயக்க தேரர் தெரிவித்தார்.

நாக விகாரைக்குச் சென்ற ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, விகாராதிபதியை சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டார். சந்திப்பு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த விகாராதிபதி மேலும் கூறுகையில்,

“வடக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் மக்களுக்கு பல பிரச்னைகள் உள்ளன. அந்த வகையில் தையிட்டி திஸ்ஸ விகாரை பிரச்னையை ஜனாதிபதியிடம் தெரிவித்தேன். பொதுமக்களுடைய காணிகளை விடுவிக்க வேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் தெரிவித்தேன். ஜனாதிபதி அதனை ஏற்றுக் கொண்டதாகவே தெரிகிறது.



விகாரை பக்கத்தில் உள்ள மக்கள் மற்றும் காணி உரிமையாளர்களுடன் கலந்துரையாடி விரைவாக ஒரு தீர்மானம் எடுக்க வேண்டும்.

எனக்கும் இந்த காணிக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. நயினாதீவு நாக விகாரை விகாராதிபதிக்கே அங்கு தொடர்புண்டு. ஆனால், பொதுமக்கள் சார்பில் இந்த கருத்தை முன் வைத்தேன்.

மேலும், போதைவஸ்து பிரச்னைகள், இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு பிரச்னைகள் உள்ளன. ஆகவே, வடக்கு மாகாணத்தில் தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டும் என்ற விடயத்தையும் தெரிவித்தேன்” - என்றார். (எ-03)

# வேகக் கட்டுப்பாட்டை இழந்த ஹயஸ் விபத்து

*யாழ்ப்பாணம், ஜன. 19*

வேகக் கட்டுப்பாட்டை இழந்த ஹயஸ் வாகனம் ஒன்று வீதியை விட்டு விலகி தூண் மற்றும் வேலி மீது மோதி விபத்துக்குள்ளானது. வட்டுக்கோட்டை - மாவடி சந்தி பகுதியில் நேற்று முன்தினம் மாலை இந்த விபத்து இடம் பெற்றது.

மூளாய் பக்கத்தில் இருந்து வந்த குறித்த ஹயஸ் வாகனம் மாவடி சந்தி ஊடாக சித்தங்கேணி நோக்கிப் பயணிப்பதற்கு திரும்பியுள்ளது.

இதன்போது, கட்டுப்படுத்த முடியாத வேகம் காரணமாக சித்தங்கேணி பக்கம் திரும்பிய வாகனம் வலது பக்கத்துக்கு மாறி வீதியோரத்தில் இருந்த தூண் மற்றும் வேலி மீது மோதி விபத்து சம்பவித்துள்ளது.

இந்த விபத்தில் உயிர்ச்சேதங்கள் ஏற்படாவிட்டாலும் தூண், வேலி மற்றும் ஹயஸ் வாகனம் என்பன கடுமையாக சேதங்களுக்குள்ளாகின. இந்த விபத்து சம்பவம் குறித்து வட்டுக்கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசியலமைப்பைக் கொண்டுவரும் முயற்சிகள் துரிதப்படுத்தப்படுவதாக ஸ்ராலினுக்கு யார் சொன்னது?



- வீரகத்தி தனபாலசிங்கம்

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் தமிழ் தேசி யப் பேரவை தூதுக் குழுவினர் தன்னைச் சந்தித்த ஒரு மாத காலத்திற்குள் தமிழ்நாடு முத லமைச்சர் முத்துவேல் கருணா நிதி ஸ்ராலின் இலங்கை தமிழர் களின் மனக்குறைகளை நிவர்த்தி செய்யக்கூடிய அரசியலமைப் புச் செயன் முறையைமுன்னெ டுக்குமாறு இலங்கை அரசாங்கத்துக்கு நெருக்குதலைக் கொடுப் பதற்கு இராஜதந்திர ரீதியான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் இந்திய பிரதமர் நரேந் திர மோடிக்கு கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

தன்னை சந்தித்த இலங்கை தமிழ் அரசியல் தலைவர்கள் தற்போது தங்களது நாட்டில் முன்னெடுக்கப்படும் அரசிய லமைப்பு சீர்திருத்தங்கள் தமிழர்களுக்கு தோற்றுவிக்கப் போகும் " பாரதூரமான

ஆபத்துக்களை" சுட்டிக் காட்டியதாக கடிதத்தில் குறிப் பிட்டிருக்கும் முதலமைச்சர், சிறுபான்மை இனத்தின் உரி மைகளைப் பாதுகாப்பதுடன் பன்முகத்தன்மை மற்றும் சமத் துவ கோட்பாடுகளை பேணிப் பாதுகாக்கவும் மாகாணங்க ளுக்கு அதிகாரங்களைப் பரவ லாக்கும் கூட்டாட்சி ஏற்பாடுகளை புதிய அரசியலமைப்பில் சேர்த்துக்கொள்ள வேண் டும் என்று இந்தியா இலங்கை அர சாங்கத்துக்கு நெருக்குதல் கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்.

அத்தகையதொரு அணுகுமு றையை புதுடில்லி கடைப்பி டித்தால் அது பிராந்திய அமை தியை உத்தரவாதம் செய்யும் நாடு என்ற இந்தியாவின் வகிபாகத்தை கௌரவிப்பதாக மாத்திரமல்ல, கூட்டாட்சியையும் மொழி மற்றும் இனத்துவ சிறுபான்மையினங்களையும் பாதுகாக்கும் இந்தியாவின் அரசியலமைப்பு விழுமியங்க ளுக்கு இசைவானதாகவும் அமையும் என்று கூறியிருக்கும் ஸ்ராலின், ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க தலைமையி லான அரசாங்கம் இனப்பிரச்சி னைக்கு தீர்வைக் காண்பது என்ற போர்வையில் புதிய அரசியலமைப்பை அறிமு கப்படுத்தும் முயற்சிகளை துரி தப்படுத்தியிருக்கின்றது என் றும் உத்தேச கட்டமைப்பு அர சியல் சுயாட்சிக்கான தமிழர்களின் அபிலாசைகளை அலட்சி யம் செய்வதன் மூலம் அவர்கள்மேலும் ஓரங்கட்டப்பட்டக் கூடிய அச்சுறுத்தலை தோற்று விக்கும் ஒற்றையாட்சி முறையை (ஏக்கியராஜ்ய) வலுப்படுத்துவ தாக தோன்றுகிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தியாவின் அனுசரணை யுடன் 1985 ஒகஸ்டில் பூட்டா னில் அன்றைய இலங்கை அர சாங்கத்துக்கும் தமிழ்க் கட்சி கள் மற்றும் ஆயுதப்போராட்ட இயக்கங்களுக்கும் இடையில் ஏற்பாடு செய்யப்பட்ட சமாதா னப்பேச்சுவார்த்தைகளில் தமிழ்ப் பிரதிநிதிகளினால் முன் வைக்கப்பட்ட " திம்புக் கோட் பாடுகள்" தற்போதைய பின்பு லத்தில் தொடர்ந்தும் பொருத்தமானவையாக இருப்பதாக தன்னைச் சந்தித்த தமிழ்த் தலை வர்கள் வலியுறுத்தியதை பிரத மர் மோடிக்கு சுட்டிக் காட்டி யிருக்கும் முதலமைச்சர் அந்த கோட்பாடுகளில் அடங்கியிருக்கும் அம்சங்களை உள்ளடக்காமல் கொண்டுவரப்படும் எந்தவொரு புதிய அரசியலமைப்பும் அநீதி மற்றும் உறுதிப்பாடின்மையை தொடரச் செய்யும் என்பதுடன் மீண்டும் மோதல்களுக்கும் மனிதாபி மான நெருக்க டிக்கும் வழிவகுக் கும் என்று எச்சரிக்கை செய்திருக்கிறார்.

1987 இந்திய -- இலங்கை சமா தான உடன்படிக்கை உட் பட வரலாற்று ரீதியாக இலங் கையுடன் கொண்டிருக்கும் நட்புறவின் காரணமாக இலங்கையில் அமைதிக்கும் நீதிக்குமாக நீண்டகால அர்ப் பணிப்புடன் செயற்பட வேண் டிய தார்மீகக் கடமையை இந் தியா கொண்டிருக்கிறது என் றும் ஸ்டாலின் எழுதியிருக்கிறார்.

ஸ்டாலினினஇந்த கடி தத்தை இலங்கை தமிழர் பிரச் சினைக்கு தீர்வைக் காணும் முயற்சிகளில் இந்திய மத்திய அரசாங்கத்துக்கு தமிழ்நாடு மூலமாக நெருக்குதலை பிர யோகிப்பதற்கு தங்களால் முன் னெடுக்கப்படும் செயற்பாடுக ளுக்கு கிடைத்த முக்கியமான ஆரம்பக்கட்ட வெற்றியாக தமிழ் தேசிய பேரவை கருது கிறது.

கடந்தவாரம் யாழ்ப்பாணத் தில் தமிழ் தேசிய பசுமை இயக் கம் ஏற்பாடு செய்திருந்த அரசியல் கருத்தரங்கில் கஜேந்திரகு மார் நிகழ்த்திய உரை இதை தெளிவாக உணர்த்துகிறது.

தங்களது தமிழ் தேசியவாத நிலைப்பாட்டுக்கு தமிழ் நாட்டில் ஆதரவு அலை யொன்று ஏற்படும் என்பதில்

நம்பிக்கையைக் கொண்டி ருக்கும் கஜேந்திரகுமார், இலங்கை தமிழரசு கட்சியை யும் ஜனநாயக தமிழ் தேசியகூட்டணியையும் இணைத் துக்கொண்டு இந்த முயற்சி களை முன்னெடுக்க வேண்டி யது அவசியம்



"நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதுடன் பாராளுமன்ற -அமைச்சரவை எதேச் சாதிகாரத்தை தடுப் பதற்கு அவசியமான பாதுகாப்பு ஏற்பா டுகளுடன் கூடிய பாராளுமன்ற ஜனநாய கத்தை கொண்டு வருவதற்கு தேசிய மக்கள் சக்தி தவறு மானால், இலங்கை ஜனநாய கத்தின் எதிர்காலத்துக்கு இன்னொரு மக்கள் கிளர்ச்சி தேவையாக இருக்கலாம்"
-பேராசிரியர் ஜெயதேவ உயன்கொட

என்று கூறுகிறார்.

தற்போதைய பாராளுமன் றத்தின் பதவிக்காலம் வரைக் கும் அந்த இரு கட்சிகளும் தமிழ் தேசிய நிலைப்பாட்டுக்கு தமிழ்நாட்டின் ஆதரவைப் பெறுவதில் தவிர்க்க முடியாத சக்திகள் என்பது அவரது நிலைப்பாடாக இருக்கிறது.

தனியொரு பாராளுமன்ற உறுப்பினரைக் கொண்ட தமிழ் தேசிய பேரவை தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளுடன் நடத் திய பேச்சுவார்த்தைகளின் மூலமாக இத்தகைய முன்னேற்றத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கிறது என்றால், ஒற்றையாட்சியை நிராகரிக்கும் தமிழ் தேசியவாத நிலைப்பாட்டைக் கொண்ட ஏனைய தமிழ்க் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களு டன் கூட்டாக செயற்படும் பட் சத்தில் தமிழ்நாட்டில் ஆதரவு அலையை உருவாக்குவதில் பெரிய பாய்ச்சலை ஏற்படுத்த முடியும் என்பது அவரது நம் பிக்கையாக இருக்கிறது.தமிழ் நாட்டுக்கு சென்று அரசியல் கட்சிகளை சந்தித்த பிறகு இதைக் கூறுகின்ற கஜேந்திர குமார்,முன்கூட்டியே தமிழரசு கட்சியுடனும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியுடனும் கலந் தாலோசித்து ஒரு கூட்டு நிலைப்பாட்டை எடுப்பதற்கு ஏன் முயற்சிக்க வில்லை என்று தெரியவில்லை. தமிழ் தேசிய வாத அணிகளைப் பொறுத்த வரை, அவர்கள் தாங்களாக ஒரு நிலைப்பாட்டை எடுத்த பிறகு மற்றைய அணியினர் தங்களு டன் இணைந்துசெயற்பட வேண்டும் என்று எதிர்பார்க் கின்ற வழமையான நடைமுறை யின் தொடர்ச்சியாகவே இதை நோக்க வேண்டியிருக்கிறது.

தேசிய இனப்பிரச்சினைக் கான அரசியல் தீர்வு தொடர் பில் தமிழ்த் தேசியவாத கட்சி கள் ஒருமித்த நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்ற தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு என்றென் றைக்குமே கானல் நீராகவே இருக்கும் போன்று தெரிகிறது.

தமிழ்நாட்டு முதலமைச்சர் தனது கடிதத்தில் " ஏக்கிய ராஜ்ய" என்ற பதத்தைப் பயன் படுத்தியிருப்பது

கவனிக்கத்தக்கது. 2015 - 2019 காலப்பகுதியில் அன் றைய அரசாங்கத்தினால் முன் னெடுக்கப்பட்ட அரசியலமைப்பு வரைவுச் செயன்மு றைக்கு பிறகு சமர்ப்பிக்கப் பட்ட இடைக் கால அறிக்கை யில் இலங்கை அரசின் தன்மை " ஏக்கியராஜ்ய" வாக அமையும் என்று குறிப்பி டப்பட்டிருந்தது.

கைவிடப்பட்ட இடத்தில் இருந்து அந்த அரசியலமைப் புச் செயன்முறை முன்னெடுக்கப் பட்டு தேசியப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்று அநுர குமார திசநாயக்க 2024 ஜனாதி பதி தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியதை அடிப்படையாக வைத் துக் கொண்டு கஜேந்திரகுமார் " ஏக்கியராஜ்ய" அரசியல மைப்பை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கொண்டுவந்து விடும் என்று நம்புகிறார் போலும்.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் அதைக் குறிப்பிட்ட ஜனாதிபதி திசநாயக்க பிறகு கடந்த ஒரு வரு டத்துக்கும் அதிகமான காலமாக புதிய அரசியல மைப்பு குறித்து எதையும் பேச வில்லை. மூன்று வருடங்க ளுக்கு பிறகு அரசியல மைப்புச் சீர்திருத்தங்கள் முன்னெ டுக்கப் படும் என்று பதவிக்கு வந்த ஆரம்பக்கட்டத்தில் கூறிய தேசிய மக்கள் சக்தி அரசாங் கம் தற்போது அதைப் பற்றி பெருமளவுக்கு மௌனத்தைச் சாதிக்கிறது.

நிறைவேற்று அதிகார ஜனா திபதி ஆட்சிமுறை ஒழிப்பு குறித்து அண்மையில் பாராளு மன்றத்தில் எதிர்க்கட்சி தலை வர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்கு பதில ளித்த பிரதமர் ஹரிணி அமரசூரிய, புதிய அர சிய லைமைப்பின் மூலமாக மாத்திரமே ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிக்கப்படும் என்று கூறினார்.

ஆனாலும், அவர் கால வரை யறை எதையும் கூற வில்லை. இலங்கையில் நிலை வரம் இவ்வாறு இருக்கும் போது தமிழ்நாடு முதலமைச்சர் இலங் கையில் புதிய அரசியல மைப்பை அறிமுகப்படுத்தும் செயன்முறைகள் துரிதப்ப டுத்தப்படுவதாக கூறியிருக்கிறார். அதனால், இலங்கை அரசி யல் நிலைவரம் தொடர்பான ஸ்ராலினின் புரிதல் குறித்து சந்தேகம் எழுகிறது.

எது எவ்வாறிருந்தாலும், இலங்கை தமிழர் பிரச்சினை குறித்து மீண்டும் அவர் அக் கறை காண்பிக்க தொடங்கியி ருப்பது வரவேற்கத்தக்கது. அதேவேளை, தமிழ்நாடு சட்ட சபை தேர்தல்கள் நெருங்கும் நிலையில், தனது மாநிலத்தின் மற்றைய அரசியல் கட்சிகள் இலங்கை தமிழர் பிரச்சி னையை கையிலெடுப்பதற்கு

முன்னதாக பிரதமருக்கு கடிதம் எழுதியதன் மூலம் ஸ்ரா லின் முந்திக் கொண்டார் என்ற விமர்சனமும் உண்டு.

பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டுக்கும் அதிகமான பெரும் பான்மைப் பலம் இருக்கின்ற போதிலும், அரசியலமைப் புச் சீர்திருத்தங்களை முன்னெ டுப்பதற்கு கிடைத்த வாய்ப்பை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் விரயம் செய்கிறது என்ற அபிப்பிராயம் தற்போது அதிகரிக்க ஆரம்பித்திருக்கிறது.

நிறைவேற்று அதிகார ஜனா திபதி ஆட்சிமுறையை ஒழிக்க வேண்டும் என்று நீண்டகால மாக குரல் கொடுத்து வந்த ஜனதா விமுக்தி பெர முன ( ஜே.வி.பி.) தலைமையி லான தேசிய மக்கள் சக்தி அரசியலமைப்பு சீர்திருத்தங்களை தாமதமின்றி முன்னெடுத்திருக்க வேண்டும் என்பதே பரந்தள வில் சிவில் சமூக அமைப்புக்க ளின் கருத்தாக இருக்கிறது. புதிய அரசியலமைப்பு ஒன்றுக்கு சர்வஜன வாக்கெடுப்பில்

மக்களின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு அரசாங்கத்தின் பதவிக் காலத்தின் முதல் வருடங்களே பாதுகாப்பான காலப் பகுதியாகும்.

அரசியலமைப்பை மாற் றுவது தொடர்பில் அரசாங் கத்திடமிருந்து உற்சாகமான பிரதிபலிப்பு வெளிப்படாமல் இருப்பது அரசியலமைப்பு ரீதி யான அல்லது ஒரு கட்சி சர் வாதிகாரத்தை நிறுவும் திசையில் அது நகரத் தொடங்கி யிருக்கிறது என்ற விமர்சனம் ஏற்கெனவே எதிரணியினால் முன்வைக்கப்பட்டிருக்கிறது.

இலங்கையின் முன்னணி அரசறிவியல் நிபுணர்களில் ஒருவரான பேராசிரியர் ஜெய தேவ உயன்கொட தேசிய மக் கள் சக்தி அரசாங்கத்தின் ஒரு வருட ஆட்சி குறித்து அண்மை யில் எழுதிய ஆய்வு ஒன்றில் இந்த அரசியலமைப்பு மாற்ற விவகாரம் குறித்து பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்:

" இலங்கையின் அரசியல் புதிய வருடத்திலும் அதற்கு பின்னரும் பெரும்பாலும் மிகவும்சர்ச்சைக் குரியதாகவும் பதற்றம் நிறைந்ததாகவும் இருக் கப்போகிறது என்பதற்கான சகல அறிகுறிகளும் தெரிகிறது. முக்கியமான எந்தவொரு அர சியலமைப்பு சீர்திருத்தத்துக்கும் இது உண்மையில் நல்ல செய்தி

அல்ல. நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியின் பிர காரம் அரசியலமைப்பு சீர்திருத் தங்களை முன்னெடுப்பதை தாம திப்பது தேசிய மக்கள் சக்தியின் சொந்த நிகழ்ச்சி நிரலுக்கு குறிப்பாக, அதன்நம்பகத்தன்மைக்கு பாதகமானது.

" நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதுடன் பாராளுமன்ற -- அமைச்சரவை எதேச் சாதிகாரத்தை தடுப்பதற்கு அவசியமான பாது காப்பு ஏற்பாடுகளுடன் கூடிய பாராளுமன்ற ஜனநா யகத்தை கொண்டுவருவதற்கு தேசிய மக்கள் சக்தி தவறுமானால் ,இலங்கை ஜனநாயகத்தின் எதிர் காலத் துக்கு இன் னொரு மக்கள் கிளர்ச்சி தேவையாக இருக்கலாம் "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் நிலங்களும் வளங்களும் பறிபோகாமல் பாதுகாக்க வேண்டும்

## வாகரை மக்கள் வலியுறுத்தல்

மட்டக்களப்பு, ஜன. 19

பறிபோகும் தமிழர்களின் நிலங்களையும் வளங்களையும் பாதுகாக்க அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவது அவசியம் என்று வாகரை பிரதேச பொதுமக்களால் வலியுறுத்தப்பட்டது.

உயிர்மை நேய விவசாய பொங்கல் விழா நேற்று முன்தினம் மட்டக்களப்பு- வாகரை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புச்சாக்கேணி 4ஆம் கட்டை பகுதியில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண மக்கள் திட்ட வரைபு ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அதன் மாகாண தலைவர் கணபதிப்பிள்ளை இராசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வாகரை பிரதேச சபை தவிசாளர் தெய்வேந்திரன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டார்.

வாகரை பிரதேசத்தில் கடந்த காலத்தில் பல்வேறு பிரச்னைகள் எதிர்கொள்ளப்பட்டன. வனவளத்திணைக்களம், தொல்பொருள் திணைக்களம் என்று பல்வே று துறைகளாலும் பல்வேறு பிரச்னைகள் ஏற்பட்டன.

அந்தவேளைகளில் அனைவரும் ஒருங்கிணைந்து முன்னெடுத்த செயல்பாடுகள் காரணமாக பல்வேறு பிரச்னைகளை தீர்க்க முடிந்தது. இதுபோன்ற பல்வேறு பிரச்னைகளை நாங்கள் எதிர்நோக்கும் சூழ்நிலைகள் காணப்படுகின்றன. அவற்றினை நாங்கள் எதிர்கொள்வதற்கு அனைவரும் ஒருங்கிணைந்து செயல்படுவது அவசியமாகும். அவ்வாறான ஒருங்கிணைந்த செயல்பாடுகள் மூலமே எதிர்காலத்தில் எமது நிலங்களையும் வளங்களையும் பாதுகாக்க முடியும் என்று கிழக்கு மாகாணத்திலிருந்து கலந்துகொண்ட பல்வேறு விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகளினாலும் பொதுமக்களாலும் தெரிவிக்கப்பட்டது.(எ)

# பேருந்து கவிழ்ந்து விபத்து: சாரதி பலி! பலர் படுகாயம்



பதுளை, ஜன. 19

கொழும்பு - பதுளை பிரதான வீதியில் ஹல்துமுல்ல, கலுபஹான பகுதியில் உள்ள ஒரு வளைவில் நேற்றுக் காலை தனியார் பயணிகள் பேருந்து ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில், சாரதி உயிரிழந்தார். மேலும், பல பயணிகள் காயமடைந்து தியத்தலாவ, பதுளை பொது மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஹல்தமுல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# மதுபானசாலை முகாமையாளர் மீது மட்டக்களப்பில் கொடூரத் தாக்குதல்

## ஒருவர் கைது, மூவர் தலைமறைவு

மட்டக்களப்பு, ஜன. 19

மட்டக்களப்பு, புதூர் பிரதேசத்திலுள்ள மதுபானசாலை ஒன்றின் முகாமையாளரை மதுப்போத்தலால் தாக்கிய சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும், மூவர் தேடப்பட்டு வருகின்றனர்.

கடந்த 9ஆம் திகதி இரவு குறித்த மதுபானசாலைக்குச் சென்ற நால்வர் கொண்ட குழுவினர் மது அருந்தியுள்ளனர்.

இதன்போது, மதுபானத்துக்கான பணத்தை முகாமையாளர் கேட்டபோது, அக்குழுவினர் முகாமையாளரின் அறைக்குள் புகுந்து மதுபோத்தலால் அவர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தாக்குதலில் படுகாயமடைந்த முகாமையாளர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் தாக்குதலாளிகள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இது குறித்து மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் விசார ணைகளை முன்னெடுத்திருந்த நிலையில் தலைமறைவாகியிருந்த சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தலைமறைவாகியுள்ள ஏனைய சந்தேகநபர்களை தேடி வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# தேசிய பூங்காவில் கைது செய்யப்பட்ட இருவருக்கு பிணை

பொத்துவில், ஜன. 19

லஹுகல தேசிய பூங்காவின் பன்சல்கொட பகுதியில் கடந்த டிசெம்பர் மாதம் 19 ஆம் திகதி வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள அதி காரிகளால் மேற்கொள்ளப் பட்ட சோதனையின் போது, வேட்டையாடப்டிய இரு சந்தேக நபர்கள் கைது செய்யப் பட்டு அம்பாறை - பொத்து வில் நீதிவான் நீதிமன்றால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

லஹுகல தேசிய பூங்கா அதிகாரிகளுக்கு கடந்த டிசெம்பர் மாதம் 19 ஆம் திகதி கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, அப்பகுதியில் விசேட சோதனை இடம்பெற்றுள்ளது. சந்தேக நபர்கள் அதி காரிகளிடமிருந்து தப்பியோடினர்.

தப்பியோடிய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது பிணையில் விடுவிக்கப்பட்டனர். (எ)

# டித்வா புயலால் மலைநாட்டின் இயற்கை வனச்சூழல் பாதிப்பு

## சுற்றாடல் அமைச்சர் தகவல்

கொழும்பு, ஜன. 19

டித்வா புயலுடன் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட மண்சரிவுகள், இலங்கையின் மத்திய மலைநாட்டின் இயற்கை வனச்சூழல் தொகுதிகளை கடுமையாகப் பாதித்துள்ளன என்று சுற்றுச்சூழல் அமைச்சு தெரிவித்துள்ளது. நாட்டின் மத்திய மலைநாட்டின் இயற்கைக்காடுகளில் 34 சதவீதமானவை சேதமடைந்துள்ளன என்று சுற்றாடல்துறை அமைச்சர் தம்மிக படபெந்தி குறிப்பிட்டுள்ளார்.

டித்வா சூறாவளியால் ஏற்பட்ட சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறித்து ஆய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் முதற்கட்ட அறிக்கையில் இந்தத் தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் அமைச்சின் செயலாளரின் தலைமையில் அமைக்கப்பட்ட இந்தக்குழு, தனது அறிக்கையை சமர்ப்பித்ததாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அனர்த்தம் நாட்டின் ஏழு பிரதான நதிப் படுக்கைகளின் சூழல் தொகுதிகளையும் பாதித்துள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன், இந்த அனர்த்தத்தின் விளைவாக இலங்கையின் கடலோர மற்றும் கடற்சூழல் தொகுதிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளும் இந்த அறிக்கையின் மூலம் தெரிய வந்துள்ளது என்று அமைச்சர் கூறினார். (எ)

# லொறி - வான் மோதி விபத்து: ஹற்றனில் இருவர் படுகாயம்



ஹற்றன், ஜன. 19

சிறிய ரக லொறியும் வானும் மோதிய விபத்தில் வான் சாரதியும் மற்றொரு நபரும் படுகாயமடைந்து டிக்கோயா ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர் என்று ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியில் ஹற்றன் குடகம சந்தியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்த விபத்து இடம்பெற்றது.

இந்த விபத்து தொடர்பில் மேலும் தெரியவருகையில், ஹற்றனில் இருந்து குடகம நோக்கிச் சென்ற லொறி பிரதான வீதியிலிருந்து இடது பக்கமாக திரும்பி குறுகிய வீதி ஒன்றுக்கு நுழைய முற்பட்ட போது டயகமவிலிருந்து ஹற்றன் நோக்கிச் சென்ற வான், லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் லொறியும் வானும் பலத்த சேதமடைந்துள்ளன. லொறி சாரதி சந்தேகத்தின் பேரில் ஹற்றன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். விபத்து குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.(எ)

# ஆளும் தரப்பு அழுத்தத்தினாலேயே பிக்குகளுக்கு எதிராக வழக்கு

## விமல் வீரவன்ஷ சொல்கிறார்



திருகோணமலை, ஜன. 19

திருகோணமலை மாவட்ட தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருடைய அழுத்தத்தினாலேயே பிக்குகளுக்கு எதிராக வழக்கு போடப்பட்டுள்ளது. இறுதியில் கரையோர பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளே சிக்கலில் மாட்டிக் கொள்ளப்போகின்றார்கள் என்று முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஷ தெரிவித்தார்.

திருகோணமலை பிரதான கடற்கரை புத்தர்சிலை மற்றும் சட்டவிரோத கட்டுமானங்கள் தொடர்பான வழக்கில் திருகோணமலை சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பலாங்கொடை கஸ்ஸப தேரரை சுகம் விசாரித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பலாங்கொட கஸ்ஸப தேரர் உள்ளிட்ட தேரர்கள் மற்றும் பொதுமக்கள் சிலர் நீதிமன்ற உத்தரவின்படி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை சந்தித்து நலன் விசாரிப்பதற்காக சிறைச்சாலைக்கு வருகை தந்தேன்.

தேசிய மக்கள் சக்தி திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர், கடலோர பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளை கட்டாயப்படுத்தி கடலோர பாதுகாப்பு சட்டங்களை மீறிய குற்றச்சாட்டின் பேரில் இந்த நபர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது.

நல்ல விதமாக அரசியல் செய்யக் கூடியவராக இருந்தால் அல்லது நல்ல உள்ளம் படைத்த பாராளுமன்ற உறுப்பினராக இருந்தால் மதம் தொடர்பிலான செயல்பாடுகள் குறித்து உயர் மட்டங்களுடன் பேசி ஏதாவது ஒரு தீர்மானத்துக்கு வந்திருக்கலாம்.

அந்த அரசியல்வாதியின் ஆசைகளை நிறைவேற்றும் முகமாகவே இந்த நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. இறுதியாக சிக்கலில் மாட்டப்போவது கரையோர பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளே- என்றார்.

இதன்போது கஸ்ஸப தேரரின் உண்ணாவிரதம் தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவரால் கேள்வி கேட்கப்பட்டபோது, அரிசிமலை விகாராதிபதி கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் உண்ணாவிரதத்தை கஸ்ஸப தேரர் தற்காலிகமாக கைவிட்டுள்ளதாகவும் இன்று 19ஆம் திகதிக்குப்பின்னர் ஏற்படுகின்ற நிலைமையைப் பொறுத்து உண்ணாவிரதம் தொடர்பில் முடிவு எடுக்கப்படும் எனவும் விமல் வீரவன்ஷ கூறினார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாண...

யோசனைகளை முன்வைத்தார்கள்.

இதனைத் தொடர்ந்தோ மாகாணசபைத் தேர்தலை எந்தத் தேர்தல் முறையில் நடத்துவது என்பது குறித்து ஆராய்ந்து விதப்புரைகளை முன்வைப்பதற்கு 12 பேரை உள்ளடக்கிய குழுவை நியமிக்கும் யோசனை அண்மையில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

சகல எதிர்க்கட்சிகளின் பிரதிநிதித்துவத்தையும் உள்ளடக்கிய வகையில் சபாநாயகரால் இந்த குழு வெகுவிரைவில் நியமிக்கப்படும்.இது தொடர்பான அறிவிப்பை சபாநாயகர் எதிர்வரும் வாரம் அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாகாண சபைத் தேர்தலில் காணப்படும் சட்ட சிக்கலுக்கு பாராளுமன்றத்தின் ஊடாக தீர்வு காண்பதற்கு சகல எதிர்க்கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

மாகாணசபைத் தேர்தல் குறித்து சகல அரசியல் கட்சிகளுடனும் வெளிப்படையாக பேச்சுவார்த்தையில் ஈடுபட தயாராகவுள்ளோம்-என்றார். (அ)

## வடக்கின்...

மாகாணப் பொங்கல் விழா - 2026" இன்று மன்னார் - திருக்கேதீஸ்வரம் திருக்கோவில் முன்றலில் சிறப்பாக நடைபெற்றது.

தமிழர் பாரம்பரிய முறைப்படி புதிரெடுத்தல், பொங்கலிடல் மற்றும் விசேட பூசை வழிபாடுகளுடன் விழா ஆரம்பமானது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய ஆளுநர், இம்முறை தைப்பொங்கல் வடக்கு மாகாண மக்களுக்கு நம்பிக்கையூட்டும் பண்டிகையாக அமைந்துள்ளதாகக் கூறினார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தைப்பொங்கலை யாழ்ப்பாணத்தில் மக்களுடன் இணைந்து கொண்டாடியதுடன், "டித்வா" புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்பாளர்களுக்கான இழப்பீடு வழங்கல், வீடில்லாதவர்களுக்கான வீட்டுத் திட்டங்கள், போதைப்பொருள் ஒழிப்பு தேசியச் செயற்றிட்டம் போன்ற முக்கிய நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தைப்பொங்கல் தமிழ் மக்களின் தனித்துவமான உழவர் திருநாள் என்றும், இதனை விவசாயிகளை கௌரவிக்கும் விழாவாகவும், கலை - பண்பாட்டை உலகுக்கு எடுத்துச் செல்லும் வாய்ப்பாகவும், ஆன்மீக மற்றும் கலாசாரச் சுற்றுலாவை மேம்படுத்தும் பெருவிழாவாகவும் மாற்ற வேண்டும் என்றும் ஆளுநர் வலியுறுத்தினார். காலநிலை மாற்ற சவால்களை எதிர்கொள்ள, பாரம்பரிய அறிவுடன் இணைந்த நவீன விஞ்ஞான முறைகளை விவசாயத்தில் பின்பற்ற வேண்டிய அவசியத்தையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், மன்னார் மாவட்டச் செயலாளர் க.கனகேஸ்வரன், மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எம்.பிரதீப், மன்னார் மாவட்ட உதவி மாவட்ட செயலாளர், வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகின் உதவிப் பணிப்பாளர் திருமதி என்.தர்சினி, வடக்கு மாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் பா.முகுந்தன், திணைக்களத் தலைவர்கள் மற்றும் பெருந்திரளான பொதுமக்கள் கலந்து கொண்டனர். (அ)

## வடக்கு - தெற்கு...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு மற்றும் தெற்கு மக்களுக்கிடையிலான கலாசாரத் தொடர்புகளை "இனவாதம்" என முத்திரை குத்த வேண்டாம். நாகதீபத்திற்குச் செல்வதும், மடு தேவாலயத்திற்குச் செல்வது மக்களின் நம்பிக்கை சார்ந்த விடயங்களே தவிர, அவை இனவாதம் அல்ல . பௌத்த கலாசாரத்தை மையமாகக் கொண்டு மற்ற அனைத்து மதங்களையும் மதிக்கும் ஒரு சமூகமே இலங்கைக்குத் தேவை.

இன்று ஜனாதிபதி அநுர குமார யாழ்ப்பாணத்தில் சுதந்திரமாக நடமாட முடிகிறது என்றால், அதற்கு எனது தந்தை உள்ளிட்ட இராணுவ வீரர்கள் செய்த தியாகமே காரணம்

வெள்ளப் பேரிடர் மற்றும் அதனால் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்து அரசாங்கம் போதிய அக்கறை காட்டவில்லை . விவசாயிகளைப் பாதுகாப்பதற்குப் பதிலாக, காய்கறிகள் மற்றும் அரிசியை இறக்குமதி செய்யும் "இறக்குமதி கலாசாரத்தை" அரசாங்கம் ஊக்குவிக்கின்றது. இதனால் உள்நாட்டு விவசாயிகள் மற்றும் நுகர்வோர் பெரும் பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றனர்.

கடந்த காலங்களில் எம்மீது மீது ஊழல் குற்றச்சாட்டுகளைச் சுமத்தியவர்கள், இன்று நிலக்கரி இறக்குமதி மற்றும் துறைமுகத்திலிருந்து கொள்கலன்களை விடுவிப்பதில் முறைகேடுகளில் ஈடுபடுகின்றனர்-என்றார்.

(அ)

## தமிழ்...

இடம்பெற்ற ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் கூட்டத்தில் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. அதில் 2026 ஆம் ஆண்டுக்கான வேலைத் திட்டங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது. கட்சியை பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டது. வருகின்ற மாதம் கட்சியின் மாநாட்டை கூட்டுவதற்கும் தீர்மானித்துள்ளோம்.

அத்துடன், காலத்தை பின்னடித்துச் செல்லாமல் மாகாண சபைத் தேர்தலை அரசாங்கம் நடத்தவேண்டும் என்பது எங்களது ஏகோபித்த கோரிக்கையாக உள்ளது. தமிழரசுக் கட்சி உட்பட ஏனைய தமிழ்க் கட்சிகளும் மாகாண சபைத் தேர்தலை வைக்கவேண்டும் என வலியயுறுத்தியுள்ளனர். ஆகவே அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை பின்னடிக்காமல் உடனடியாக நடத்தவேண்டும். எம்மைப் பொறுத்தவரை பழைய முறைப்படி மாகாண சபைத் தேர்தலை நடத்தவேண்டும். அது தமிழ் மக்களது தேவையாகவும் கோரிக்கையாகவும் உள்ளது. இது தொடர்பாக மலையக-தமிழ்க் கட்சிகள், முஸ்லிம் கட்சிகள், மாகாண சபைத் தேர்தலை நடத்த விரும்பும் சிங்கள கட்சிகள் என்பனவும் வலியுறுத்தி வருகின்றன.

அரசாங்கம் புதிய அரசியல் யாப்பை கொண்டு வருமாக இருந்தால் அந்த புதிய அரசியல் யாப்பில் தமிழ் மக்களது தேசிய இனப் பிரச்னைக்கு தீர்வாக என்ன விடயங்களை உள்ளடக்கப் போகின்றார்கள் என்பதை தமிழர் தரப்புடன் அவர்கள் பேச வேண்டும். தமிழர் தரப்பு அதற்கான ஒரு பொது முடிவுக்கு வரவேண்டும். ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி, தமிழரசுக் கட்சி, தமிழ் தேசிய மக்கள் முன்னணி போன்றன ஒரு இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும். தீர்வு பொதுவிடயம், தமிழ் மக்களது நலன் சார்ந்த விடயம் என்ற அடிப்படையில் தமிழ் மக்களுக்கு ஒத்துவரக் கூடிய ஒரு தீர்வுத் திட்டத்தை முன் வைக்கவேண்டும். பல தீர்வுத் திட்டங்கள் ஏற்கனவே இருந்தாலும்கூட நாங்கள் ஒருமுகப்படுத்தி சரியான தீர்வுத் திட்டத்தை முன்வைக்கவேண்டும் என்ற தேவை உள்ளது. எல்லோரும் இணைந்து அதனை முன்வைக்க வேண்டும்.

மேலும், பயங்கரவாத தடைச்சட்டம் முற்று முழுதாக நீக்கப்பட வேண்டும். தற்போது புதிய வடிவத்தில் புதிய பயங்கரவாத தடைச்சட்டம் வருகின்றது. இலங்கையில் உள்ள புத்திஜீவிகள் எல்லோரும் அதனை நிராகரித்துள்ளார்கள். சர்வதேச மனிதவுரிமைகள் அமைப்புக்கள் கூட அதனை நிராகரித்துள்ளது. இலங்கையின சட்டத்தில் இருந்து பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும். சாதாரண குற்றங்களுக்கு இருக்கின்ற சட்டங்கள் இருக்கின்றது. அதனை பயன்படுத்த முடியும்-என்றார். (அ)

## வடக்கு-கிழக்கில்...

இதன் காரணமாக எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் பரவலாக மிதமானது முதல் சற்று கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

அதேவேளை இக்காலப்பகுதியில் மத்திய, ஊவா, வடமத்திய மற்றும் தென் மாகாணங்களுக்கும் மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

எனவே வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நெல் அறுவடைச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் விவசாயிகளும், அறுவடை செய்த நெல்லை உலர விடும் விவசாயிகளும் இந்த மழை நாட்களைக் கருத்தில் கொண்டு செயற்படுவது சிறந்தது.

வெங்காயம் மற்றும் மரக்கறிச் செய்கையாளர்களும் இந்த மழை நாட்களைக் கருத்தில் கொள்வது சிறந்தது.

அதேவேளை தற்போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவும் குளிரான நிலைமை அடுத்த சில நாட்களுக்கு சற்று அதிகரித்துக் காணப்படும்-என்றார். (அ)

## கல்வி...

எமது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் இது பற்றி உறுதியளிக்கப்பட்டது.

துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய வகையிலேயே மறுசீரமைப்பு நடவடிக்கையை முன்னெடுக்க திட்டமிட்டோம்.

முதற்கட்டமாக தரம் ஒன்று மற்றும் 6 இல் கல்வி மறுசீரமைப்பை மேற்கொள்ள இருந்தோம். எனினும், தரம் ஆறு ஆங்கில பாடதிட்டத்தில் இடம்பெற்ற ஒரு குளறுபடியை அடிப்படையாகக் கொண்டு எதிரணிகள் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த முற்படுகின்றன.

எதிரணி கூறுவதுபோல் கல்வியை நாம் ஆபாசமாக்கவில்லை." - எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பேரிடரிலும் அரசியல் நடத்த முற்பட்ட எதிரணி தற்போது கல்வியிலும் நடத்துகின்றது. இது வங்குரோத்து அரசியலின் வெளிப்பாடாகும். கல்வியையும் அரசியல் ஆயுதமாக்குவதற்கு முற்பட்டனர்.

கல்வி மறுசீரமைப்பை மக்கள் வரவேற்றுள்ளனர். அதனை வலியுறுத்தி போராட ஆரம்பித்துள்ளனர். குறைபாடு இருந்தால் நிவர்த்தி செய்வோம். கல்வி மறுசீரமைப்பை கைவிடபடாது.

சமூகத்தில் தோற்றுவிக்கப்பட்ட குழப்பத்தால் மக்கள் மத்தியில் ஐயம் ஏற்பட்டது. அதனால்தான் தரம் ஆறு திட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டது." - என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மேலும் குறிப்பிட்டார்.

(அ)

## 250...

இந்நிகழ்வில் உரையாற்றிய சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ-

எதிர்வரும் 24ஆம் திகதி ஒரே நாளில் 42 புதிய மையங்கள் திறக்கப்படவுள்ளன.எமது நாட்டின் சுகாதாரத் துறையில் இன்று மிகப்பெரிய சவாலாக இருப்பது நீரிழிவு மற்றும் இரத்த அழுத்தம் போன்ற தொற்றா நோய்களாகும்.

இவற்றை ஆரம்பத்திலேயே கண்டறிந்து சிகிச்சை அளிப்பதற்காகவே இந்த "ஆரோக்கியா" மையங்களை நிறுவுகிறோம். இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் இதற்காக 1500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. வெறும் ஆலோசனை மையங்களாக மட்டுமன்றி, யோகா, இசை சிகிச்சை மற்றும் ஆயுர்வேத முறைகளையும் உள்ளடக்கிய நவீன மையங்களாக இவை திகழும்-என்றார். (அ)

## யாழ்...

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

படுகாயமடைந்த நபர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கப் ரக வாகனம் மற்றும் முச்சக்கரவண்டி மோதியே இந்த விபத்து சம்பவித்துள்ளது.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளில் யாழ். பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (அ)

## வடக்கு ரயில்...

பத்மபிரிய தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் மஹவ - ஓமந்தை வரையிலான ரயில் பாதை முற்றாக மூட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் மதவாச்சி - தலைமன்னார் ரயில் பாதையின் அபிவிருத்திப் பணி இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

மஹவ முதல் ஓமந்தை வரையிலான ரயில் பாதையில் ஐந்து ரயில் பாலங்களை மாற்றியமைக்கவும், யானைகள் கடந்து செல்வதற்காக அமைக்கப்பட்ட சுரங்கப்பாதையை புனரமைக்கும் பணிகளை இவற்றுக்கு இணையாக முன்னெடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் சிங்கள - தமிழ் புத்தாண்டுக்கு முன்னர் ரயில் பாதை புனரமைப்புப் பணிகளை முழுமையாக நிறைவு செய்து, வடக்கு - தெற்கு போக்குவரத்தை வழமை போன்று முன்னெடுக்கவும் எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் 'புலதிசி கடுகதி ரயில்' மற்றும் 'உதயதேவி' ரயில்கள் சேவையில் ஈடுபடவுள்ளதுடன், திருகோணமலை வரையான 'இரவு தபால் ரயில்' சேவையை ஆரம்பிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் ரயில்வே பொது முகாமையாளர் குறிப்பிட்டுள்ளார்.

இன்று முதல் அநுராதபுரம் - காங்கேசன்துறை வரையும், 27 ஆம் திகதி முதல் ஓமந்தை - காங்கேசன்துறை வரையும் 'யாழ். ராணி' ரயில் சேவையில் ஈடுபடவுள்ளது. (அ)

## வல்லை...

- மனைவி மற்றும் அவர்களது மகள் ஆகியோர் நேற்று ஞாயிற்றுக்கிழமை வடமராட்சி நோக்கித் தமது காரில் பயணித்தவேளை யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியில் வல்லை பகுதியில் கார் கட்டுப்பாட்டை இழந்து பாலத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகினர். திருநெல்வேலி ஆடியபாதம் வீதியைச் சேர்ந்த தாயும் தந்தையும், மகளும் பயணித்த நிலையில் மகளின் கால்கள் முறிவடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த மூவரையும் அங்கிருந்தவர்கள் மீட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்துள்ள நிலையில் , அச்சுவேலி பொலிஸார் விபத்து தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# அரச தரப்பு எம்.பிக்களின் சம்பளம் எங்கே போகிறது?

## விசாரணையில் இறங்கியது ஆணைக்குழு

கொழும்பு, ஜன. 19

பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளம், ஒரு குறிப்பிட்ட கணக்கில் வரவு வைக்கப்படுகிறதா அல்லது அந்தந்த பாராளுமன்ற உறுப்பினர்களின் கணக்குகளில் வரவு வைக்கப்படுகிறதா என்பது குறித்து இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு பாராளு மன்றத்திடம் விளக்கம் கோரியுள்ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில அளித்த முறைப்பாட்டைத் தொடர்ந்து இந்த விளக்கம் கோரல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தேசிய மக்கள் சக்தி கட்சி உறுப்பினர்களின் மாதாந்த கொடுப்பனவுகள் அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுவதாகவும், இது ஊழல் என்றும் அவர் தனது முறைப்பாட்டில் கூறியிருந்தார்.

கம்மன்பில கடந்த ஆண்டு செப்ரெம்பர் 21 ஆம் திகதி இந்த முறைப்பாட்டைச் செய்திருந்தார்.

தற்போதுள்ள சட்ட விதிகளின் கீழ், விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து ஆணைக்குழுவிடம் பதில் கோருவதாக கம்மன்பில தமது முறைப்பாட்டில் குறிப்பிட்டிருந்தார். (அ)

## கல்விச் சீர்திருத்தங்களை நாங்கள் எதிர்க்கவில்லை!

### கூறுகின்றார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, ஜன. 19

கல்விச் சீர்திருத்தங்களை முன்னெடுப்பதை ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் எதிர்க்கவில்லை எனவும், கல்வியில் ஆபாசத்தைப் புகுத்தும் நடவடிக்கைகளையே தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியினால் முன்னெடுக்கப்பட்டு வரும் மூச்சுத் திட்டத்தின் கீழ், கிதுல்கல பிரதேச வைத்தியசாலைக்கு 33 இலட்சம் ரூபா பெறுமதியான அத்தியாவசிய மருத்துவ உபகரணங்களை வழங்கியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நிகழ்வில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர், அரசாங்கத்தின் கல்விச் சீர்திருத்த முன்னெடுப்புகள் குறித்துப் பல கடுமையான விமர்சனங்களை முன்வைத்தார்.

கல்விச் சீர்திருத்தங்கள் முறையான "கிறீன் பேப்பர்" அல்லது "வைற் பேப்பர்" ஆவணங்கள் மூலம் முன்னெடுக்கப்படாமல், வெறும் "பவர்பொயிண்ட்" விளக்கக்காட்சிகளுடன் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் சாடினார்.

தரம் 1 முதல் 6 வரையிலான கல்விச் சீர்திருத்தங்களுக்கு யாரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. ஆனால், பாடத்திட்டங்கள் முறையாக மீளாய்வு செய்யப்படாததால், அதில் ஆபாசமான விடயங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. இதனையே நாம் எதிர்க்கிறோம் என அவர் விளக்கமளித்தார்.

எதிர்க்கட்சி சார்பில் "பிரபஞ்சம்" திட்டத்தின் கீழ் ஆங்கிலம், சீனம், ஜப்பானிய மற்றும் இந்தி மொழிக் கல்வியின் முக்கியத்துவம் குறித்துப் பேசிய போது கிண்டல் செய்த அமைச்சர்களே இன்று கல்விச் சீர்திருத்தம் பற்றிப் பேசுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

"நாட்டின் வரலாற்றில் முதல் முறையாக, அரச அதிகாரம் இல்லாமல் எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு நாட்டு மக்களுக்குப் பெறுமானம் சேர்க்கும் பணியை நாம் முன்னெடுத்து வருகிறோம்" என சஜித் பிரேமதாச இதன்போது பெருமிதம் தெரிவித்தார். மக்களின் ஆயுட்காலத்தை அதிகரிக்கவும், நோயாளிகளைக் குணப்படுத்தவுமே இவ்வாறான மருத்துவ உபகரணங்கள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

## நந்தன குணதிலக்க காலமானார்



கொழும்பு, ஜன. 19

முன்னாள் அமைச்சரும், மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் முக்கிய உறுப்பினருமான நந்தன குணதிலக்க காலமானார்.

சுகவீனமுற்று ராகம போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று தனது 63ஆவது வயதில் அவர் உயிரிழந்தார் என மருத்துவமனை தகவல்கள் தெரிவித்தன. (அ)

## ரயில் சேவைகள் மீண்டும் ஆரம்பம்!

கொழும்பு, ஜன. 19

"டித்வா" புயல் காரணமாக நிறுத்தப்பட்டிருந்த கொழும்பு கோட்டையிலிருந்து திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு வரையான இரவு நேர அஞ்சல் ரயில்கள் உட்பட பல ரயில்களை மீண்டும் சேவையில் ஈடுபடுத்த ரயில்வே திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைய, கொழும்பு கோட்டைக்கும் திருகோணமலைக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் இரவு நேர அஞ்சல் ரயிலை நாளை முதல் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன், கொழும்பு கோட்டைக்கும் மட்டக்களப்புக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் "புலத்திசி" நகர கடுகதி ரயிலும் நாளை முதல் தினமும் சேவையில் ஈடுபடுத்தப்படும்.

உதய தேவி ரயில் சேவையையும் அனர்த்த நிலையின் பின்னர் மீண்டும் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை, புயலினால் சேதமடைந்த வடக்கு ரயில் மார்க்கத்தைப் புனரமைக்கும் பணிகள் இந்திய அரசாங்கத்தின் உதவியின் கீழ் எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன. (அ)

## தப்பிச் செல்ல முயலும் சாரதிகள் மீது கொலை முயற்சி வழக்கு தாக்கலாகும்

### பொலிஸார் கடும் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 19

சட்டவிரோதமாக ஆபத்தான வகையில் மாற்றிய மைக்கப்பட்ட வாகனங்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆபத்தான உபகரணங்களைப் பொருத்தி, சட்டவிரோதமான முறையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ள பேருந்துகள், முச்சக்கர வண்டிகள் மற்றும் ஏனைய வாகனங்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான வாகனங்கள் பொதுமக்களின் பாதுகாப்பிற்குப் பாரிய அச்சுறுத்தலாக அமைவதால், வாகனப் பரிசோதகர்களிடமிருந்து உத்தியோகபூர்வ தடை உத்தரவுகளைப் பெற்று, அவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் வலியுறுத்தியுள்ளனர்.

இதேவேளை, போக்குவரத்து விதிமீறல்களில் ஈடுபட்டுவிட்டு தப்பிச் செல்லும் முயற்சியில், பொலிஸ் அதிகாரிகளின் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் வகையில் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளுக்கு எதிராக "கொலை முயற்சி" குற்றச்சாட்டின் கீழ் வழக்குப் பதிவு செய்யுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

## ஈரான் மீது அமெ. விதித்த 25 வீத வரி இலங்கைக்கு நேரடி பாதிப்பு இல்லை

கொழும்பு, ஜன. 19

இலங்கை தற்போது ஈரானிலிருந்து எரிபொருளை கொள்வனவு செய்யவில்லை. எனவே, ஈரானுடன் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் நாடுகளுக்கு எதிராக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விதிக்கப்பட்டுள்ள 25 வீத வரி விதிப்பு, இலங்கையை நேரடியாகப் பாதிக்காது என்று எரிசக்தி அமைச்சின் செயலாளர் உதயங்க ஹேமபால தெரிவித்துள்ளார்.

அத்துடன், முறையான விலைமனுக்கோரல் நடைமுறைகளின் கீழ் தற்போது இந்தியா, சிங்கப்பூர் மற்றும் சீனாவில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களிடமிருந்து இலங்கை எரிபொருள் கொள்வனவு செய்து வருவதாகவும், ஈரானுடன் தனியாக எந்த ஒப்பந்தமும் செய்யவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கை தமது மொத்த எரிபொருள் தேவையின் 90 வீதத்துக்கு மேற்பட்டதை இறக்குமதி செய்து வருகின்றது.

அத்துடன், ஆண்டுதோறும் எரிபொருள் இறக்குமதிக்காக செலவிடப்படும் தொகை, சுமார் 4 முதல் 5 பில்லியன் அமெரிக்க டொலராக மதிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## பொருளாதாரம் ஸ்திர நிலையில்!

### அதிகரித்தது பணப்புழக்கம்

கொழும்பு, ஜன. 19

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள வாராந்த பொருளாதாரத் தரவு அறிக்கையின்படி, கடந்த வாரத்தில் திறைசேரி உண்டியல்கள் மற்றும் பிணைமுறி பெறுமதிகள் ஸ்திரமான நிலையில் காணப்பட்டன.

வெளிநாட்டு முதலீட்டாளர்களிடமுள்ள திறைசேரி உண்டியல்கள் மற்றும் பிணைமுறிகளின் ரூபாய் பெறுமதி, முந்தைய வாரத்துடன் ஒப்பிடுகையில் சுமார் 1 வீதத்தினால் குறைவடைந்துள்ளது.

புழக்கத்திலுள்ள பணத்தின் அளவு அதிகரித்துள்ளமை மற்றும் வர்த்தக வங்கிகள் மத்திய வங்கியில் வைப்பிலிட்டுள்ள தொகையில் ஏற்பட்டுள்ள உயர்வு காரணமாக, முந்தைய வாரத்தை விட "உத்தியோகபூர்வ ஒதுக்கம்" அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது. (அ)

# மாணவர்களின் மதிய உணவுக்கான பணத்தில் கணவனின் பிறந்தநாள் கொண்டாடிய அதிபர்!

கொழும்பு, ஜன. 19

மெதிரிகிரிய பகுதியில் உள்ள ஒரு பாடசாலையின் அதிபர் மீது சுமத்தப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுகளும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என வடமத்திய மாகாண பிரதம செயலாளர் ரஞ்சனா ஜெயசிங்க தெரிவித்தார்

அவர் பாடசாலை மாணவர்களின் மதிய உணவுப் பணத்தை மோசடி செய்து, அதை தனது கணவரின் பிறந்தநாள் விழாவுக்குப் பயன்படுத்தியதாகக் கூறப்படு கிறது.

அரசாங்கத்தால் பாடசாலையின் ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கு மதிய உணவை வழங்காமல் அந்த பணத்தை மோசடி செய்து திட்டமிடப்பட்டிருந்த தனது கணவரின் பிறந்தநாளுக்கு செலவிட்டதாகவும் அதிபர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

அந்தப் பாடசாலையின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் அதிகாரிகள் மற்றும் பாடசாலை குழந்தைகளின் பெற்றோர்கள் இது தொடர்பாக மாகாண கல்வி அதிகாரிகளுக்கு அளித்த எழுத்துபூர்வ முறைப்பாட்டின் அடிப்படையில் அதிகாரிகள் இந்த விவகாரம் குறித்து விசாரணையைத் தொடங்கினர்.

பாடசாலை குழந்தைகளுக்கு உணவு வழங்காமல், அந்த நாளில் உணவு வழங்கப்பட்டதாகக் கூறி போலி வவுச்சர்களை தயாரித்து பணத்தை மோசடி செய்ததாக விசாரணையில் தெரியவந்தது. பெற்றோர்கள் தாக்கல் செய்த முறைப்பாட்டில், பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கிய வழங்குநரிடமிருந்து கணவரின் பிறந்த நாள் விழாவுக்குப் பால் சாதம், கட் லெட்டுகள் மற்றும் கொண்டைக் கடலை வாங்க மோசடி பணம் பயன்படுத்தப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணையின்போது, குற்றம் சாட்டப்பட்ட அதிபர் கல்வி நிர்வாகத் தேர்வில் தேர்ச்சி பெற்று நிர்வாக அதிகாரியாக தகுதி பெற்றிருந்தார், ஆனால் தவறான நடத்தையில் ஈடுபட்டதால் அந்த நியமனத்தை நிறுத்தி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வட மத்திய மாகாண பிரதம செயலாளர் ரஞ்சனா ஜெயசிங்க தெரிவித்தார். (அ)

## 5 இலட்சம் சாரதி அனுமதிப் பத்திரங்கள் மார்ச் மாதத்துக்குள் நேரடி விநியோகம்!

கொழும்பு, ஜன. 19

அட்டைப் பற்றாக்குறை காரணமாக வழங்கப்படாமல் நிலுவையில் இருந்த சுமார் 5 இலட்சம் சாரதி அனுமதிப் பத்திரங்கள், எதிர்வரும் மார்ச் மாதத்திற்குள் விநியோகிக்கப்படவுள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்க இது குறித்துத் தெரிவிக்கையில், அச்சிடப்பட்ட இந்த அனுமதிப் பத்திர அட்டைகள் தபால் திணைக்களம் ஊடாக விண்ணப்பதாரர்களின் வீடுகளுக்கே நேரடியாக அனுப்பி வைக்கப்படும் எனக் குறிப்பிட்டார்.

அட்டைத் தட்டுப்பாடு காரணமாக, நிரந்தர சாரதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் பணி இடைநிறுத்தப்பட்டு, தற்காலிக அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டு வந்தன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.01.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.